©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 12.00 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 32] CHENNAI, WEDNESDAY, AUGUST 11, 2021
Aadi 26, Pilava, Thiruvalluvar Aandu–2052

## Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

---

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**CONTENTS**

Pages.

GOVERNMENT EXAMINATIONS / EDUCATIONAL OFFICERS

Loss of Certificates .. .. .. .. .. .. .. 110

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை**

தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கான திருத்தம் .. .. .. .. 110-138

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### GOVERNMENT EXAMINATIONS / EDUCATIONAL OFFICERS

LOSS OF CERTIFICATES

It is hereby notified that the Original Higher Secondary Certificates / Matriculation Certificates / Diploma Certificates / School Certificates of the following pupils are reported to have been lost beyond recovery. Necessary steps are being taken to issue the duplicate of the said Certificates. If the Originals were to be found by anybody, they should be treated as invalid and sent to the Secretary, Board of Higher Secondary Examination / Directorate of Government Examinations, Chennai-6 / Director of Technical Education, Chennai-25 / Inspector / Inspectress of Matriculation and Anglo-Indian Schools as the case may be for cancellation:

| *சி.என்.சி. எண்.* | *மாணவர்/மாணவி பெயர், பள்ளியின் பெயர் மற்றும் கல்வி மாவட்டம்.* | *பதிவு/ சான்றிதழ் எண்.* | *மாதம் மற்றும் வருடம்.* | *தேர்வின் விவரம்.* | *கடித எண்ணும், தேதியும்.* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| No. VI(2)/75/2021. | | | | | |
| | **தஞ்சாவூர்:** | | | | |
| | கலைவாணி, சா. | 002703 | August 2002 | தொழில் நுட்பத் தேர்வு | ந.க. எண் 011710/டி/2021, 23–07–2021 |
| No. VI(2)/76/2021. | | | | | |
| | **தருமபுரி:** | | | | |
| | சசிரேகா, சி. | 002168 | August 2002 | தொழில் நுட்பத் தேர்வு | ந.க. எண் 215416/டி/2021, 23–07–2021 |

பொன். குமார்,
*இணை இயக்குநர் (பணியாளர்),*
*அரசுத் தேர்வுகள் இயக்ககம்,*
*சென்னை–600 006.*

### தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை

### தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கான திருத்தம்

*அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ/SC/7-44*, நாள் 24–12–2020

Lr. No. TNERC/Legal/3145/D.No.387/2021

No. VI(2)/77/2021.

**2003** ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50 ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும், இதன் பொருட்டு இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன்மூலம் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில் பின்வரும் திருத்தங்களை செய்கிறது. அதன் வரைவு மேற்கொள்ள 181 ஆம் பிரிவின் (3) ஆம் உட் பிரிவின்படி வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது.

### திருத்தம்

1. மின்வழங்கல் விதித்தொகுப்பில், 6 ஆம் ஒழுங்குமுறை விதியில் பின்வரும் சொற்றொடர்களுக்குப் பதிலாக,

“**6.** சிறுமக் கட்டணங்கள் (Minimum Charges) – நுகர்வோர், உரிமதாரருக்கு கீழே விவரமாகத் தந்துள்ளபடி ஒவ்வொரு மின்னிணைப்புக்கும் சிறுமக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். மின்சாரம் நுகரப்படாவிட்டாலும், நீதிமன்ற ஆணையால் மின்னிணைப்பு துண்டிப்பில் இருந்தாலும், வழங்கப்பட்ட மின்சாரக் கட்டணம் சிறுமக் கட்டணத்தை விடக் குறைவாக இருந்தாலும், சிறுமக் கட்டணத்தை கட்டியே ஆக வேண்டும்.”

பின்வரும் இந்தச் சொற்றொடர் அமைக்கப்படும்:

“**6.** சிறுமக் கட்டணங்கள் (Minimum Charges) – மின்நுகர்வோர், உரிமதாரரிடம் கீழே விவரிக்கப்பட்டவாறு மின்னிணைப்பு ஒவ்வொன்றையும் பொறுத்து சிறுமக் கட்டணங்கள் / நிலைக் கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்:

மின்சாரம் எதுவும் நுகரப்படாதிருக்கிற போதும் கூட அல்லது நீதிமன்றத்தின் ஆணைகளின் காரணங்கள் உள்ளடங்கலான எந்த காரணங்களுக்காகவும், மின்னிணைப்புகள் துண்டிக்கப்படுகிற போதோ அல்லது வழங்கப்படும் மின்சாரத்தின் விலையானது குறைந்தபட்ச கட்டணங்களுக்கும் குறைவாக இருக்கிற போதோ, மாதாந்திர சிறுமக் கட்டணங்கள் / நிலைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியதாகும்.

**விளக்கம்** "மாதாந்திர சிறுமக் கட்டணங்கள் / நிலைக் கட்டணங்கள்," தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பில் / மின்பகிர்மான விதித்தொகுப்பில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவ்வப்போது ஆணையத்தின் மின் கட்டண ஆணைகளில் நிர்ணயிக்கப்பட்ட சிறுமக் கட்டணங்கள் / நிலைக் கட்டணங்களைச் சுட்டுவதாகும். 112 கிலோ வாட்டிற்கு மேற்பட்ட மின்தேவையுடன் ஒப்பளிக்கப்பட்ட தாழ்வழுத்த மின்னிணைப்புகளுக்கு, மாதாந்திர சிறுமக் கட்டணங்கள் / நிலைக் கட்டணங்கள், உயர் அழுத்த மின்னிணைப்புகளுக்கு ஏற்ப பொருந்தத்தக்கதாகும். ஆனால், அவை ஒப்பளிக்கப்பட்ட முழுமையான மின் தேவைக்கானதாகும்".

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை 600 032,
2021 ஜூலை 26.

**சு. சின்னராஜலு,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

## விளக்கவுரை

தாழ்வழுத்த மின்நுகர்வோருக்குப் பொருந்தத்தக்க குறைந்தபட்ச கட்டணங்கள், அவ்வப்போது ஆணையத்தினால் மின்கட்டண ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டணங்களின் விளைவுடையதாகும் மற்றும் தெளிவாக்கத்தின் பொருட்டு மின்வழங்கல் விதித் தொகுப்பின் 6 ஆம் ஒழுங்குமுறை விதியினை திருத்தம் செய்தல் அவசியமாகிறது.

உத்தேசிக்கப்பட்ட திருத்தம், இக்கருத்துருவை அமல்படுத்த விழைகிறது.

சென்னை 600 032,
2021 ஜூலை 26.

**சு. சின்னராஜலு,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

## பின்னிணைப்பு

### தமிழ்நாடு மின்வளங்கல் விதித்தொகுப்பு

| *வரிசை எண்* | *இருந்து வரும் வகைமுறை* | *திருத்தப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| | "6. சிறுமக் கட்டணங்கள் (Minimum Charges) – நுகர்வோர், உரிமதாரருக்கு கீழே விவரமாகத் தந்துள்ளபடி ஒவ்வொரு மின்னிணைப்புக்கும் சிறுமக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். மின்சாரம் நுகரப்படாவிட்டாலும், நீதிமன்ற ஆணையால் மின்னிணைப்பு துண்டிப்பில் இருந்தாலும், வழங்கப்பட்ட மின்சாரக் கட்டணம் சிறுமக் கட்டணத்தை விடக் குறைவாக இருந்தாலும், சிறுமக் கட்டணத்தை கட்டிஆக வேண்டும்." | 6. சிறுமக் கட்டணங்கள் (Minimum Charges) – மின்நுகர்வோர், உரிமதாரரிடம் கீழே விவரிக்கப்பட்டவாறு மின்னிணைப்பு ஒவ்வொன்றையும் பொறுத்து சிறுமக் கட்டணங்கள் / நிலைக் கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்:<br>மின்சாரம் எதுவும் நுகரப்படாதிருக்கிற போதும் கூட அல்லது நீதிமன்றத்தின் ஆணைகளின் காரணங்கள் உள்ளடங்கலான எந்தக் காரணங்களுக்காகவும், மின்னிணைப்புகள் துண்டிக்கப்படுகிற போதோ அல்லது வழங்கப்படும் மின்சாரத்தின் விலையானது குறைந்தபட்ச கட்டணங்களுக்கும் குறைவாக இருக்கும் போதோ, மாதாந்திர சிறுமக் கட்டணங்கள் / நிர்ணயிக்கப்பட்ட நிலைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியதாகும்.<br>**விளக்கம்** "மாதாந்திர சிறுமக் கட்டணங்கள் / நிலைக் கட்டணங்கள்," தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பில் / மின்பகிர்மான விதித்தொகுப்பில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவ்வப்போது ஆணையத்தின் மின் கட்டண ஆணைகளில் நிர்ணயிக்கப்பட்ட சிறுமக் கட்டணங்கள் / நிலைக் கட்டணங்களைச் சுட்டுவதாகும். 112 கிலோ வாட்டிற்கு மேற்பட்ட மின் தேவையுடன் ஒப்பளிக்கப்பட்ட தாழ்வழுத்த மின்னிணைப்புகளுக்கு, மாதாந்திர சிறுமக் கட்டணங்கள் / நிலைக் கட்டணங்கள், உயர் அழுத்த மின்னிணைப்புகளுக்கு ஏற்ப பொருந்தத்தக்கதாகும். ஆனால், அவை ஒப்பளிக்கப்பட்ட முழுமையான மின் தேவைக்கானதாகும்". |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை 600 032,
2021 ஜூலை 26.

**சு. சின்னராஜலு,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*